வடக்கு.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 16/2020

எனது இல:NP/07/10/02/176
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
09.10.2020

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III மற்றும் IIஇல் உள்ளவர்களுக்கான 1வது மற்றும் 2வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2017 (II) (2020)**

மேலே குறிப்பிடப்பட்ட பதவியில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது அப்பதவியின் நடைமுறையிலுள்ள சேவைப் பிரமாணக்குறிப்பின் பந்தி 10 மற்றும் இணைப்பு 01, 02ற்கு அமைவாக 2020ஆம் ஆண்டு **நவம்பர்** மாதம் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நடாத்தப்படும். போதிய அளவிலான விண்ணப்பங்கள் கிடைக்காமை அல்லது வேறு காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்யும் அதிகாரம் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

2.0 தகைமைகள் :

- ஓர் அலுவலர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை **இரண்டிற்கும் (இரு தரங்களிற்கும்) ஒரே தடவையில் தோற்றமுடியாது.**
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று,

  தரம் III பிரிவிலுள்ள அலுவலர்கள் 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கும், தரம் II பிரிவிலுள்ள அலுவலர்கள் 2வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கும் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.
- மேலும் இதுவரை இப்பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத அலுவலர்களும் விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவர்.

3.0 விண்ணப்பப் படிவம்

- விண்ணப்பமானது இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக **2020.11.06ஆம்** திகதி அல்லது அதற்கு முனனர் கிடைக்கக்கூடியவாறு **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III / II இல் உள்ளவர்களுக்கான 1வது / 2வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2017 (II) (2020)"** எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

4.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் (Driving License)

மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு ஆவணமொன்றை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யும் அதிகாரம் மேற்பார்வையாளருக்கு உண்டு.

5.0 **விண்ணப்பங்கள் :-**

- விண்ணப்பத்தின் இல 1 முதல் 6 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுத்தல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முற்பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகிறது.
- மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.
- தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பம் இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

6.0 **பரீட்சைக் கட்டணம் :-**

6.1 முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

6.2 ஏனைய பரீசார்த்திகள் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250ஐயும் ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களிற்குத் தோற்றுவதாயின் ரூபா 500ஐயும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தி, காசுக்கட்டளையினை "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**" என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக்கூடியவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6.3 விண்ணபதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

7.0 விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் பின்வரும் விபரங்களுடன் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்திய காசுக்கட்டளையின் உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

08.0 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு 19ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

09.0 உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.